## ஆண்கள் சங்க அறிக்கை

“கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்” சங்கீதம் 126:3

இலங்கையில் இன்று அங்கிலிக்கன் திருச்சபையின் சரித்திர ஏட்டைத் திருப்பினால் நீலக் கடற்கரையோரத்தில் கம்பீரமாக நிற்கும் இந்த கம்பீரமான சந்நிதானத்தின் வயது நூற்றி ஐம்பது. அந்த வகையில் இந்த சபையில் ஒரு அங்கத்துவனாகவும், சங்கத்தின் காரியதரிசியாகவும் இந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

“கடமைகளைத் தந்த கடவுள் அதைச் சுமக்க தோள்களையும் தந்திருக்கிறார்”

தொடர்ந்து இன்றுவரை ஆலய நிகழ்வுகளின் வரலாற்று ஏட்டைப் புரட்டினால் 1999 ஆம் வருடம் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி சில ஆண்கள் ஒன்று சேர்ந்து ஒரு சங்கத்தை உருவாக்க நினைத்தார்கள். பின்பு இதற்கான சட்டத்திட்டங்கள் 1999 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17 ஆம் திததி ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி காலை 11 மணிக்கு ஆண்கள் சங்கம் பிறந்தது. இதன் பிதா வணக்கத்திற்குரிய அருட் திரு.ஜூபிலி பொன்னையா அவர்கள்.

இன்று வரை சங்கம் தவழ்ந்து வந்த பாதையைத் திரும்பி பார்ப்போம்.

இலவச மருத்துவமனையை ஆரம்பித்து நடத்தி வந்தோம். ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தினால் 27.11.1992 இல் இதை மூடும் நிர்ப்பந்தத்திற்குள்ளானோம்.

### மாராநாதா சிறுவர் இல்லம் - ஹட்டன்

இங்குள்ள 29 சிறுவர்களுக்கு தொடர்ந்து உதவிக்கரம் நீட்டி வருகிறோம்.

### சீருடைகள்

எமது ஆலயத்திலும் வெளியிலும் உள்ள வசதி குறைந்த சிறார்களுக்கு பள்ளிக்கூட சீருடைகள், அப்பியாசக் கொப்பிகள், பெனசில்கள் போன்றவைகளை கொடுத்து வருகிறோம்.

### கொடி தினம்

இதன் மூலம் சங்கத்திற்கு பணம் வசூலிக்கப்பட்டது.

### வயோதிபர் இல்லம் - ராகம

யூனியன் ஆலயம் சார்பாக குருவானவர் பாரதி அவர்கள் நடாத்திவரும் இந்த வயோதிபர் இல்லத்தாருடன் ஒவ்வொரு வருடமும் நத்தார் பண்டிகை கொண்டாடி வருகிறோம். இவ்வாலயம் அங்கிலிக்கன் சபைக்கு சொந்தமானது.

### காலை ஆராதனை

(அ) 2001 ஆண்டு நவம்பர் மாதம் 21ம் திகதி ஆராதனையை ஆண்கள் சங்கம் நடாத்தியது.

(ஆ) 2002 வருடம் ஜூலை மாதம் 2ம் திகதி ஆராதனையின் காணிக்கை இலவச மருத்துவமனைக்கு கொடுக்கப்பட்டது.

**குருவானவர் சிறில் ரோச்**

இவரின் வேண்டுகோளுக்கு இணங்கி கீழ்வரும் ஆலயங்களில் உள்ள 76 சிறுவர் சிறுமியர்கள் 20 வருடத்திற்கு பின் நத்தார் கொண்டாட உதவியில் இணைந்தோம்.

| | | | |
|---|---|---|---|
| (அ) | பரி.பவுல் ஆலயம் | - | கிளிநொச்சி |
| (ஆ) | பரி.லூக்கா ஆலயம் | - | தருமபுரம் |
| (இ) | பரி.மத்தாயஸ் ஆலயம் | - | தண்ணீரூற்று |

**விதவைகள் உதவி**

"மெய்யாகவே தேவையிலிருக்கும் விதவைகளைச் சரியாக கவனித்து கொள்" (1 தீமோத்தேயு 5:3)

இவ்வருடத்தில் கிழக்கு மாகாணத்தில் மொரக்கொட்டாஞ்சேனையில் உள்ள பரி.பவுல் ஆலய குருவானவர் மூலம் 10 விதவைகளுக்கு ஒரு வருட பண உதவி செய்ய சங்க அங்கத்தவர்களும், நலன்விரும்பிகளும் முன் வந்தார்கள்.

**தந்தையர் தினம் (Fathers' Day)**

கடந்த காலம் என்பது சரித்திரம், எதிர் காலம் என்பது இறைவனின் கொடை, நிகழ் காலம் என்பது எங்களுடையது. "மக்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்தில் இருக்கும் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது" (மத்தேயு 5:16)

இந்த சங்கத்தின் உதவிகள் அனைத்தும் தேவையானவர்களையே சென்றடைந்தது பல விதத்திலும் எமது சங்கத்திற்கு பக்க பலமாக இருந்த டாக்டர்.பியுலா சாமுவேல் திருமதிகள்.வசந்தி ரட்ணராஜ் (தாதி), கருணேஸ்வரி சாமுவேல், திரு.டேவிட் (மருந்து கொடுப்பவர்), நித்தியானந்தன், ஒகஸ்டீன் சாமுவேல் ஆகியோர் என்னோடு இணைந்து இலவச மருத்துவமனைக்கு உயிரோட்டமாக இருந்தார்கள். எத்தனை இருள்கள் மூடி மறைத்தாலும் ஒரு தீக்குச்சியின் ஒளியில் இருள் மறைந்துவிடும். ஆலயத்தின் உள்ளே சிறு விளக்காக எரிந்து கொண்டிருக்கும் ஆண்கள் சங்கத்திற்கு தூண்டுகோலாக இருந்த கரங்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி. என்ன இடறல் வந்தாலும் (மத்தேயு 18:6) இந்த சங்கத்தை கட்டிக் காப்பதே வருங்கால இளம் சந்ததியின் கடமை எனக்கூறி இந்த இதழில் இடம் கொடுத்த தேவனுக்கு நன்றியை ஏறெடுக்கிறேன்.

என்.சிவநாதன்
காரியதரிசி.